**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**05 ஜனவரி 2016 / 26 ரபீவுல் ஆகிர் 1437**

# <u>நன்றி தெரிவிப்பதன் உண்மையானப் பொருளை அறிதல்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي جَعَلَ الشَّمْسَ ضِيَاءً وَالْقَمَرَ نُوْرًا، وَأَنْزَلَ الْقُرْآنَ لِلْمُتَّقِيْنَ ذِكْرًا، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّم عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ صَلاَةً وَسَلامًا دَائِمَيْنِ إِلَى يَوْمِ تَجِدُ كُلُّ نَفْسٍ مَا عَمِلَتْ مُحْضَرًا .أَمَّا بَعْد، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து ”ஈமான்” எனும் ஓரிறை நம்பிக்கையும், இவ்வுலக வாழ்க்கையும் வழங்கப்பட்டதற்காக அல்லாஹ்வுக்கு உச்சகட்டமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோமாக! பரக்கத்துகள் (வளமும் அபிவிருத்தியும்) மிக்க இப்புனிதமான நேரத்தில், அல்லாஹ்வின் மீது ”தக்வா” மிக்க (பக்திமிக்க), அவனது கட்டளைகளை நிறைவேற்றும் ஆற்றல்மிக்க, அவன் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளும் ஆற்றல்மிக்க அடியார்களில் நின்றும் நம்மை ஆக்க

வேண்டுமென அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! அவ்வாறு செய்வதன் மூலம் நாம் சொர்க்கவாசிகளில் நின்றும் ஆகலாம். அந்த சொர்க்கவாசிகள் திருக்குர்ஆனின் பின்வரும் அத்தியாயமாகிய "அஜ்ஜுமர்" என்பதின் 74-வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது போல் நன்றிக்குரிய வார்த்தைகளைக் கூறுபவர்கள் ஆவர்:

وَقَالُوا۟ ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِى صَدَقَنَا وَعْدَهُۥ وَأَوْرَثَنَا ٱلْأَرْضَ نَتَبَوَّأُ
مِنَ ٱلْجَنَّةِ حَيْثُ نَشَآءُ ۖ فَنِعْمَ أَجْرُ ٱلْعَـٰمِلِينَ ﴿٧٤﴾

பொருள்: அப்போது அவர்கள்: "இறைவனுக்கே புகழ் அனைத்தும்! அவன் எங்களிடம் தன் வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். மேலும் எங்களை பூமிக்கு வாரிசுகளாக்கினான். இனி நாங்கள் சுவனத்தில் விரும்புகின்ற இடத்தில் தங்கிக் கொள்ளலாம். ஆகா! நற்காரியங்களைச் செய்பவர்களுக்கு எத்தனை சிறந்த கூலி இருக்கிறது!" எனக் கூறுவார்கள்.

நாம் அடிக்கடி "அல்ஹம்துலில்லாஹ்" (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) என்று கூறுகிறோம். இக்கூற்றானது, சகல அருள்களையும் நமக்கு வழங்கும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்து கூறுகிறோம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. எனினும், நாம் அடிக்கடி இவ்வார்த்தையைக் கூறுவதால் நமது உட்புறமுள்ள ஆன்மீக உயிரோட்டத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அவ்வாறு கூறுகிறோம் என்பதை நாம் மறந்திருக்கலாம். அவ்வார்த்தையின் முக்கியத்துவத்தை உணராமலும் இருக்கலாம்.

அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் இவ்விஷேசமான பண்பு தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களை இரவுப் பொழுதில் விழிக்க வைத்து, அவர்களின் கால்கள் வீங்குமளவிற்கு தொழுது வணங்குமாறு அவர்களை ஆர்வப்படுத்தியது. நன்றி தெரிவிக்கும் இச்சீரிய பண்பு தான் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு, தஹஜ்ஜத் தொழுகைகளை ஆர்வத்துடன் தொழுவதற்கான ஆற்றலை வழங்கியது. செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் நவின்ற ஹதீது ஒன்றை இமாம் முஸ்லிம் (ரஹ்) தனது ஹதீதுக் கிரந்தத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தனது கால்கள் வீங்கும் அளவிற்கு நின்று வணங்குபவர்களாக இருந்தார்கள். நான் அவர்களிடம்: ”இறைத்தூதர் அவர்களே! உங்களின் முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ள நிலையில் ஏன் இவ்வாறு கஷ்டப்பட்டு நின்று வணங்குகிறீர்கள்?” என்று கேட்டேன். அதற்கு : ”நான் ஒரு நன்றியுள்ள அடியாராக ஆக வேண்டாமா?” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

ஜமாஅத்தார்களே! மேற்கண்ட ஹதீதில் நாம் சிந்தனை செய்வது அவசியமாகும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மறுமையில் அல்லாஹ்வினால் சொர்க்கம் முதற்கொண்டு, அனைத்து வித தனிச் சிறப்புகளும் வழங்கப்படுவார்கள் என வாக்களிக்கப்பட்டுள்ளார்கள். இதனை மற்றொரு வார்த்தையில் கூறுவதென்றால் ”இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு நிரந்தரமான வெற்றி வாக்களிக்கப்பட்டுள்ளது” என்றும் கூறலாம். மனித தர்க்க சாஸ்திர ரீதியில் நாம் பார்த்தால், சொர்க்கத்தைக் கொண்டு உத்திரவாதமளிக்கப்பட்ட ஒருவர், நன்கு ஓய்வு எடுக்கலாம்; மறுமையில் தனது நிலையைப் பற்றி கவலை கொள்ள வேண்டிய

அவசியம் அவருக்கில்லை. எனவே தான், இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் மேற்கண்டவாறு கேள்வியைக் கேட்டார்கள்.

எனினும், அல்லாஹ்வின் பார்வையில் சிறப்பான அந்தஸ்த்தைப் பெற்றவர்களின் விஷயத்தில் நாம் ஆய்வு செய்வது அவசியமாகும். அவர்கள் தமது வணக்க வழிபாட்டுச் செயல்களை நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ, அல்லாஹ்விடம் சிறப்பான அந்தஸ்த்தை அடைய வேண்டுமென்பதற்காகவோ நிறைவேற்றவில்லை என்பது புலனாகிறது. காரணம், அதுதான் அவர்களின் நோக்கமாக இருந்தால், சொர்க்கத்தைக் கொண்டு வாக்களிக்கப்பட்டதும் அவர்கள் தமது வணக்க வழிபாட்டுச் செயல்களை நிச்சயம் நிறுத்திக் கொள்வார்கள். எனவே, அல்லாஹ்வின் பார்வையில் சிறப்பான அந்தஸ்த்தைப் பெற்றவர்கள், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அனைத்து அருள்களுக்கு நன்றி தெரிவித்து தான் வணக்க வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றினார்கள் என்பது புலனாகிறது. எந்த அளவு அவர்களுக்கு அருள்கள் அதிகமாக வழங்கப்பட்டதோ, அந்த அளவு அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதிலும், தம்மைப் படைத்தவனாகிய அல்லாஹ்வின் பக்கம் தம்மை நெருக்கமாக்கிக் கொள்வதிலும் அவர்கள் உறுதியுடனும், உயிரோட் டத்துடனும் காணப்பட்டார்கள். இம்மாதிரியான சிறந்த மனோபாவத்தை, நமது வணக்க வழிபாடுகளின் விஷயத்தில், குறிப்பாக, வெள்ளிக்கிழமையின் ஜும்ஆத் தொழுகைகளின் விஷயத்தில் நாம் நம்மில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஜும்ஆத் தொழுகைகளைத் தொழுவது நம்மீது கடமை என்ற நோக்கத்தில் மட்டும் நாம் தொழுவது கூடாது. மாறாக, செல்வம், குடும்பம், ”ஈமான்” (ஓரிறை நம்பிக்கை),

வாழ்வாதாரங்கள் போன்ற பல அருள்களை வழங்கியதற்காக நன்றி தெரிவித்து அல்லாஹ்வுக்கு ஸஜ்தா (சாஷ்டாங்கம்) செய்ய வேண்டும். நாம் கடைசியாக, எப்போது அல்லாஹ்வுக்கு ஸஜ்தா செய்து, ”யா அல்லாஹ்! நீ வழங்கியுள்ள அனைத்து அருட்கொடைகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்” என்று கூறினோம் எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது ”இஹ்யா உலூமுத்தீன்” எனும் நூலில் நன்றி தெரிவிப்பதற்கான மூன்று வித நிலைகளை விளக்கியுள்ளார்கள். அவை மிகவும் சுவாரசியமானவையாக உள்ளன. அவர்கள் எழுதுகிறார்கள்: ஒரு நன்றியுள்ள நபர் அரசவையில் நுழையும் ஒரு நபரைப் போன்றுள்ளார். அரசர் அவருக்கொரு குதிரையை நன்கொடையாகக் கொடுக்கின்றார்.

**நன்றி தெரிவிப்பதின் முதல் நிலை** (அதுதான், பலரால் பின்பற்றப்படும் நிலையாகும்) வெகுமதி கிடைத்தற்காக மகிழ்ச்சியடைந்து நன்றி தெரிவிப்பதாகும். காரணம், அரசனிடமிருந்து அவர் பெற்ற அந்த குதிரையைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது மிகச் சிறந்த பரிசாகக் கருதி வைத்துக் கொள்ளலாம். ஒருவேளை, அவர் அந்தக் குதிரையை அரசனிடமிருந்து பெறா விட்டாலும், வேறு யாரிடமிருந்தாவது பெற்றிருந்தாலும், அல்லது பாலைவனத்தின் ஒரு பகுதியில் அவருக்குக் கிடைத்ததாக இருந்தாலும் அதே அளவு அவர் மகிழ்ச்சியடைந்திருப்பார். இவ்விதமான நன்றி, பொதுவான மக்கள் தெரிவிப்பதாகும். அவர்களுக்குக் கிடைத்த வெகுமதியின் காரணமாக

மகிழ்ச்சியடைந்து, நன்றி தெரிவிக்கின்றார்கள். அவ்வெகுமதியைக் கொடுத்தவனைக் கவனித்து அல்ல.

**இரண்டாவது வகை மக்கள்**, கிடைத்த வெகுமதியை நினைத்து மகிழ்ச்சியடைந்து நன்றி தெரிவிப்பதில்லை. அதனை வழங்கிய நபரை நினைத்து, மகிழ்ச்சியடைந்து நன்றி தெரிவிப்பவர்கள் ஆவர். உதாரணமாக, மேற்கண்ட நபர், அவருக்கு அக்குதிரையைக் கொடுத்த அரசனை நினைத்து, மகிழ்ந்து, நன்றி தெரிவிப்பதாகும். இது, உண்மையான நன்றி செலுத்துதல் ஆகும். இந்த அடிப்படையில் தான், நாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏதாவது அருட்கொடைகள் வழங்கப்பட்டால் (அது சோதனையின் அடிப்படையில் வழங்கப்பட்ட போதிலும்) அவற்றை நாம் மகிழ்ச்சியுடன் பெற்று, நன்றி தெரிவிக்கின்றோம். காரணம், அது அல்லாஹ் நம்மீது அன்பு கொண்டுள்ளான்; நம்மீது கவனம் செலுத்துகிறான் என்பதற்கான அடையாளமாகும். அந்நிலையில், நமது நன்றி தெரிவித்தல் அவ்வெகுமதியைக் கொடுத்தவனை அடிப்படையாகக் கொண்டிருக்கமே தவிர, கிடைத்த வெகுமதியை அடிப்படையாகக் கொண்டிருக்காது.

உதாரணமாக, நமக்கு ஒருவர் ஏதாவதொரு வெகுமதியை வழங்கினால், வெகுமதியைக் கவனத்தில் கொள்ளாமல் கொடுத்தவரை நினைத்து மகிழ்கிறோம். காரணம், அவ்வெகுமதியைக் கொடுத்தவர்(அவர் எம்மாதியான வெகுமதியைக் கொடுத்த போதிலும்) நம்மை அங்கீகரித்து அவ்வெகுமதியை வழங்கியுள்ளாரே என நினைத்து மகிழ்கிறோம்.

**இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் நன்றி தெரிவிப்பதில் உண்மையான நோக்கத்தைக் கொண்டுள்ள மூன்றாவது பிரிவாரை** பின்வருமாறு விளக்குகிறார்கள். அதாவது, அரசனிடமிருந்து குதிரையைப் பெற்ற அந்த

நபர், அரசனிடம் மீண்டும் நெருக்கம் பெறுவதற்காகத் தொடர்ந்து அந்த அரசருக்குப் பணிவிடை செய்கிறார். ஒருவேளை, அந்த வெகுமதி அவரிடமிருந்து பறிக்கப்பட்டாலும், அந்த அரசனிடம் அவருக்கு நெருக்கமான அந்தஸ்த்து இருக்கும் காலமெல்லாம் தொடர்ந்து அவர் மகிழ்ச்சியை உணர்பவராக, நன்றி தெரிவிப்பவராகவே இருப்பார். இதுதான் முற்றிலும் உண்மையான நன்றி செலுத்துதலாகும். நாம் எந்த அளவுக்கு அதிகமாக அருள்களை வழங்கப்படுகின்றோமோ அந்த அளவு அந்த அருள்களை அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ள நாம் பயன்படுத்த வேண்டும்.

நன்றி தெரிவிக்கும் செயலுக்கு இது ஒரு சிறிய அறிமுக உரையாகும். இன்ஷாஅல்லாஹ், இம்மாதம் முழுவதும் இதனை மேற்கொண்டு விரிவாக விளக்குவோம்.

அல்லாஹ்வுக்காக நன்றி தெரிவிக்கும் மக்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வை எப்போதும் புகழும் சொர்க்கவாசிகளில் நின்றும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.